


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## நவம்பர் - 2019

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 20.11.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- விளையாட்டு நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்











# தமிழக நிகழ்வுகள்

- **மாநகராட்சி மேயர் உள்ளிட்ட உள்ளாட்சித் தலைவர் பதவிகளுக்கு மறைமுகத் தேர்தல்** நடத்துவது குறித்து தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் செவ்வாய்க்கிழமை (19.11.2019) ஆலோசிக்கப்பட்டது.
    - தமிழக அமைச்சரவைக் கூட்டம் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் செவ்வாய்க்கிழமை (19.11.2019) நடைபெற்றது.
    - இந்தக் கூட்டத்தில், உயர்கல்வி, தொழில், உள்ளாட்சி ஆகிய துறைகளில் முக்கிய முடிவுகளை எடுப்பது குறித்து விவாதிக்கப்பட்டது.
    - **செய்தி துளிகள்**

| எந்தெந்த காலகட்டங்கள்…… | |
|---|---|
| மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேரடி மற்றும் மறைமுகத் தேர்தல்கள் நடத்தப்பட்ட ஆண்டுகள் விவரம்: | |
| 1986 முதல் 2001 வரை | நேரடி தேர்தல் முறை |
| 2006 | மறைமுகத் தேர்தல் |
| 2011 | நேரடி தேர்தல் |

# தேசிய நிகழ்வுகள்

- பஞ்சாப் மாநிலத்தில் உள்ள ஜாலியன்வாலா பாக் தேசிய நினைவிடத்தை நிர்வகிக்கும் அறக்கட்டளையின் அறங்காவலராக காங்கிரஸ் கட்சியின் தலைவர் அங்கம் வகித்து வந்த நிலையில்,

அதனை நீக்குவதற்கான மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

- **‘ஜாலியன்வாலா பாக் தேசிய நினைவிட சட்டத் திருத்த மசோதா’** என்ற பெயரிலான அந்த மசோதா, **மக்களவையில்** கடந்த **ஆகஸ்ட் மாதம் 2-ஆம்** தேதி நிறைவேற்றப்பட்டிருந்தது.
- **செய்தி துளிகள்**:
  - தேசிய நினைவுச்சின்னச் சட்டம், 1951, அறங்காவலர்கள் காங்கிரஸ் தலைவர்களாக இருப்பார்கள் என கூறுகிறது.
  - ஜாலியன் வாலா பாக் அறக்கட்டளை கடந்த 1951-இல் உருவாக்கப்பட்டது.

We Shine Academy™

- **ஹரியானா** மாநிலமானது **‘பவந்தர் பார்பாய் யோஜ்னா** (Bhavantar Bharpayee Yojana-BBY) என்ற **திட்டத்தின்** கீழ் கூடுதல் பயிர்களை இணைத்துள்ளது.
  - கேரட், பட்டாணி, கின்னோ, கொய்யா, குடை மிளகாய் மற்றும் கத்திரிக்காய் ஆகியவை இந்தத் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ள சில பயிர்களாகும்
  - **செய்தி துளிகள்:**
    - BBYன் கீழ், விவசாயிகள் தங்கள் பயிர்களை அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட குறைந்த விலைக்கு விற்றதற்காக இழப்பீடு பெறுகிறார்கள்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- எல்லை பாதுகாப்பு கண்காணிப்புக்கு உதவக்கூடிய **கார்டோசாட்-3 செயற்கைக்கோளை** இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) வருகிற 25-ஆம் தேதி விண்ணில் ஏவ உள்ளது.
    - ஆந்திர மாநிலம், **ஸ்ரீ ஹரிகோட்டாவில்** உள்ள சதீஷ் தவண் விண்வெளி மையத்தின் இரண்டாவது ஏவுதளத்திலிருந்து, பி.எஸ்.எல்.வி.சி-47 ராக்கெட் மூலம் திங்கள்கிழமை (நவ.25) **விண்ணில் ஏவப்பட உள்ளது**.
    - **செய்தி துளிகள்:**
        - அமெரிக்காவின் 13 செயற்கைக்கோள்கள் : இந்த கார்டோசாட்-3 செயற்கைக்கோளுடன் அமெரிக்காவுக்குச் சொந்தமான 13 சிறிய ரக செயற்கைக் கோள்களும் விண்ணில் ஏவப்பட உள்ளன.
        - 21-ஆவது எக்ஸெல் ரக ராக்கெட்: இந்த 14 செயற்கைக் கோள்களும் பி.எஸ்.எல்.வி.சி-47 ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட உள்ளன.

# விளையாட்டு நிகழ்வுகள்

- **இந்தியா-பாகிஸ்தான் அணிகள் இடையிலான டேவிஸ் கோப்பை போட்டி** கஜகஸ்தான் தலைநகர் **நூர்-சுல்தானில் நடைபெறும்** என சர்வதேச டென்னிஸ் சம்மேளனம் (ஐடிஎப்) அறிவித்துள்ளது.
    - இந்தியா-பாகிஸ்தான் அணிகள் இடையிலான டேவிஸ் கோப்பை ஆட்டம் இஸ்லாமாபாதில் நடைபெறும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

- இதனால் இரு நாடுகளின் டேவிஸ் கோப்பை போட்டி வரும் 29, 30 தேதிகளில் கஜகஸ்தான் தலைநகர் நூர்சுல்தான் நகரில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## முக்கிய தினங்கள்

- **ஆப்பிரிக்கா தொழில்மயமாக்கல் தினம்** ஒவ்வொரு ஆண்டும் **நவம்பர் 20** அன்று கொண்டாடப்படுகிறது.
  - பல ஆப்பிரிக்க நாடுகளில் உள்ள அரசாங்கங்களும் பிற அமைப்புகளும் ஆப்பிரிக்காவின் தொழில்மயமாக்கல் செயல்முறையைத் தூண்டுவதற்கான வழிகளை ஆராயும் காலம் இது.
  - 2019 கருப்பொருள்: "ஆப்பிரிக்க தொழில்துறையை ஆப்கிஎ.்.ப்டிஏ சந்தைக்கு வழங்குவது"

## திருக்குறள்

**குறள் எண் : 23**

அதிகாரம் : நீத்தார் பெருமை

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : பாயிரம்

**இருமை வகைதெரிந்து ஈண்டுஅறன் பூண்டார்**
**பெருமை பிறங்கிற்று உலகு.**

**விளக்கம் :** பிறப்பு வீடு என்பன போல் இரண்டிரண்டாக உள்ளவைகளின் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து அறத்தை மேற்கொண்டவரின் பெருமையே உலகத்தில் உயர்ந்தது.

We Shine Academy™